THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

February, 1955

CONNEMARA PUBLIC LIBRARY
16 AUG 1958
MADRAS

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

பெப்ரவரி, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :— சங்கை C. P. ஹைனமென், லிருக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
" தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
" தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
" ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
" A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதமும் பிரசங்கமும்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கக் குறிப்புகள்.
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. இரக்ஷணிய மனோகரம்
7. வேத வினாக்களும், விடைகளும்.
8. கி.மு. சங்கப் பொருட்கள்.
9. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI   பசுமலை, பெப்ரவரி 1955   இலக்கம் 4
வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை,
ஜனுவரி 18, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

கடவுளின் கிருபையால் அத்தியட்சாதீன சங்கக் கூட்டங்கள் அவருடைய ஆவியின் பிரசன்னத்தாலும் அங்கத்தினருக்குள்ளிருந்த நல்ல சகோதரத்துவத்தாலும் ஆசீர்பெற்றது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சபையின் நன்மைக்கேதுவானவை என நம்புகிறேன். ஆலோசிக்கப்பட்ட விஷயங்களில் முக்கியமான மூன்றைப்பற்றி மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. இளைஞருக்குள் நடைபெறும் ஊழியத்தின் பெரிய குறைவு சுட்டிக் காட்டப்பட்டது. ஓய்வுநாள் பாடசாலை, கி. மு சங்கங்கள், பாலிய மிஷனெரி சங்கங்கள், வாலிப சங்கங்கள் ஆகியவற்றின்மூலம் இந்த ஊழியத்தை விருத்திசெய்யப் பெரும் முயற்சி எடுக்கவேண்டுமென்ற தீர்மானம் செய்யப்பட்டது. இதற்காக மற்றொரு இளைஞர் ஊழியரையும் நியமிக்க யோசிக்கிறோம்.

2. கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகையின் முக்கியத்துவம் அழுத்தம் திருத்தமாய்க் கூறப்பட்டது. எல்லாப் பாஸ்டரேட்டுகளிலும் இது ஒழுங்காய்க் கொண்டாடப்படுமென நம்புகிறோம்.

3. கிறிஸ்தவ ஈகை. அத்தியட்சாதீனத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் வருடத்திற்கொருமுறை சென்று சபையின் தேவைகளை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் எடுத்துக் கூறி, வருகிற வருடத்தில் சபையின் தாபரிப்புக்காக அவர்களிடம் வாக்கு வாங்கும் ஓர் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஆதரவான பிரதிகளும் அச்சிலிருக்கிறது

காலஞ்சென்ற கனம் முக்யாலு அத்தியட்சரவர்களுடைய இடத்தில் கிருஷ்ணா—கோதாவரி ஆதீனத்திற்கு ஒரு புதிய அத்தியட்சரைப் பெப்ரவரி மாதம் தேர்ந்தெடுக்க விருக்கிறது. இந்த ஊழியத்திற்குரிய ஓர் உண்மையும் உத்தமமுமான மேய்ப்பன் தேர்ந்தெடுக்கப்படும்படி உங்களை ஜெபிக்கக் கேட்கிறேன்.

கனம் ப்ரௌன் அம்மாள் விடுமுறையிலிருந்து திரும்பி தற்போது இரட்சண்யபுரம் பாடசாலையின் தலைவியாக பொறுப்பேற்றிருக்கிறார்கள். கனம் போசன்கெட் அம்மாள் வருகிற ஜூலை மாதம் வேலையினின்றும் ஓய்வெடுத்துக்கொள்வார்கள். அதுவரை இரட்சண்யபுரத்தில் இருந்துகொண்டே அத்தியட்சாதீனத்தின் பல பாகங்களைச் சந்தித்து ஸ்திரீகளின் ஐக்கிய சங்கங்களை விருத்தி செய்வதில் உதவிபுரிவார்கள்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

பெப்ரவரி	5.	வீரம்பல் பாஸ்டரேட்.
,,	6.	கமுதி.
,,	11—12.	வத்தலக்குண்டு—தொழில்கல்வி ஆலோசனைக் கூட்டம்.
,,	13.	கரிசல்குளம் பாஸ்டரேட்.
,,	19—21.	ராமநாதபுரம்—ராஜசிங்கமங்கலம் பாஸ்டரேட்டுகள்.
,,	24—25,	திருமன்றயூர்—நிர்வாக சங்கம்.
,,	26.	மதுரை, டோக் அம்மையார் கல்லூரி சங்கம்.
,,	27.	மதுரை, பரி. ஜியார்ஜ் ஆலயம்—திடப்படுத்தல்.

தென்னிந்தியத் திருச்சபை
மதுரை இராமநாதபுரம் அத்தியட்சாதீன சங்கத்தின் ஆறாவது கூட்டம்.
திருமங்கலம், 13—1—55.

அத்தியட்சரின் ஆரம்பப் பிரசங்கம்.

கடந்த ஏழு வருஷங்களிலும், விசேஷமாக முந்தின அத்தியக்ஷாதீன சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து சென்று போன மூன்று வருஷங்களிலும், கடவுள் நமக்குச் செய்த நன்மைகளுக்காகவும், காண்பித்த இரக்கத்துக்காகவும் இந்த ஆறாவது கூட்டத்தின் ஆரம்பத்திலேயே அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். அவருடைய கிருபையினாலே சபையின் வாழ்வு சமாதானமாகவும், ஒழுங்காகவும் நடந்து வந்திருக்கிறது. அவரின் அன்பின் அடையாளங்கள் பல நமக்குக் கிடைத்தன. 1947 முதல் 1953 வரை ஏற்பட்ட மழைத் தாழ்சியினால் உண்டான பயங்கரமான உபத்திரவங்கள் ஓரளவில் நீங்கியிருக்கின்றன. சில இடங்கள் தவிர மற்றெல்லா இடங்களிலும் பஞ்சத்தினால் தங்கள் ஊர்களை விட்டுப்போன குடும்பங்கள் திரும்பி வந்திருக்கின்றன. இடிந்துபோன வீடுகள் மறுபடியும் கட்டப்பட்டிருக்கின்றன இரண்டொரு பாஸ்ற்றரேட்டைத் தவிர மற்ற எல்லா பாஸ்ற்றரேட்களும் கடனைத் தீர்க்கவேண்டிய முயற்சி எடுத்திருக்கின்றன பொதுவாக நமது சபையின் ஈகை விருத்தி அடைந்து கொண்டேயிருக்கிறது. இது நமக்குத் தைரியம் உண்டாக்கக்கூடிய ஓரடையாளம். A B C F.M., C.M.S., C.E.Z.M.S., S.P.G. தனி நிதி ஆகிய இந்த அயல் நாட்டு நண்பர்கள் முன்போலவே நமது ஊழியத்தை மிகவும் உதாரத்துவமாகத் தாங்குகிறார்கள். சென்ற மூன்று ஆண்டுகளில் அமெரிக்கன் போர்டார் பல புது வேலைகளுக்கென்று புது நன்கொடைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பேருதவி முழுவதுக்கும் நாம் கடவுளுக்கும் நமது மேல் நாட்டு நண்பர்களுக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சர்க்காரும் கல்வி இலாகா மூலமாக நமது பள்ளிகளுக்குச் செய்யும் உதவியைப் பெருக்கினதற்காகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக் ஒன்றரை ஆண்டுகளுக்குமுன் நடந்த அத்தியட்சாதீன சங்கக் கூட்டத்தில் சபை எழுப்புதலுக்கென்று ஜெபிக்கவேண்டும் என்ற அழைப்பு தேவனால் நமக்கு அளிக்கப்பட்டதாலும், அதனால் பல சபைகளில் ஜெபவாஞ்சை புதுப்பிக்கப்பட்டதாலும், சென்ற அக்டோபர் மாதம் நடந்த கன்வென்ஷன் கூட்டத்தின் பலனாகப் பல குடும்பங்களிலும் தனியாட்களிலும் பரிசுத்தாவியின் கிரியைகள் காணப்பட்டதாலும், கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். இவைகளைப்பற்றி நான் பிற்பாடு பேச விரும்புகிறேன் ஆனால் ஆரம்பத்திலேயே இவைகளுக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தாமல் இருக்கமுடியாது. இதே நேரத்தில் நாம் நன்றியறிதலோடு கவனிக்கவேண்டிய குறிப்புகளில் இன்னொன்றையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தங்களைக் குருத்துவ ஊழியத்திற்கென்று சமர்ப்பிக்கிற வாலிபர்களின் தொகை சற்றுப் பெருகியிருக்கிறது. சபையின் சுகத்தையாவது, சுகவீனத்தையாவது காண்பிக்கும் முக்கியமான அடையாளங்களில் இது ஒன்று.

மூன்று ஆண்டுகளுக்குமுன் அத்தியக்ஷாதீன சங்கக் கூட்டத்துக்கு நான் செய்த பிரசங்கத்தில் நான் ஓர் எச்சரிப்புக் கொடுக்கத் துணிந்தேன். சீன தேசத்துச் சபைகளுக்குத் திடீரென்று ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக் காட்டினேன். அவைகள் எதிர்பாராதவண்ணமாக, மேல்நாட்டுச் சபையின் தொடர்பை முற்றிலும் இழந்துவிட நேரிட்டதை ஞாபகப்படுத்தினேன்; அதைப் பார்த்து நாமும் அயல்நாட்டுச் சபைகளின் உதவி இல்லாமல், இந்தியாவிலேயே வேரூன்றி நிற்கக்கூடிய சபை முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினேன். ஐந்து ஆண்டுகளுக்குள், அதாவது 1957-ம் வருஷத்துக்குள், இப்படி அயல்நாட்டின் உதவியில்லாமல் நிற்கக்கூடிய நிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டுமென்று சொன்னேன். நான் அப்பொழுது எதிர்பார்த்ததைப் பார்க்கிலும் இப்பொழுதுள்ள நிலைமை சற்று அனுகூலமாயிருக்கிறது என்பது மெய்தான். ஆயினும் இங்கே கவனிக்கவேண்டிய இரண்டு காரியங்களைக் குறித்து ஒரு வார்த்தை கூறவேண்டும். அரசாங்கத்தார் வெளிநாடுகளிலிருந்து வரும் மிஷனெரி ஊழியர்கள், விசேஷமாக சுவிசேஷ ஊழியத்தைச் செய்ய விரும்புகிறவர்கள், இனி வராதபடி தடுக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது நமக்குத்தெரிந்த விஷயம். அதுபோலவே, வெளியிலிருந்து வரும் பணத்தையும் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று திட்டமாக எதிர்பார்க்கவேண்டும். அதுவுமல்லாமல், ஆந்திரா தேசத்திலும், கேரள நாட்டிலுமுள்ள அரசியல் நிலைமையைக் கவனிக்கவேண்டும். இவ்விரண்டு பாகங்களில் பொது உடைமைக் கட்சியார் அரசாட்சிக்கு வந்தால் தமிழ் நாட்டிலுள்ள நம்முடைய நிலை அதிகமாக மாறுதலடையும்

அயல் நாட்டுச் சபைகளின் உதவியில்லாமல் நிற்கக்கூடிய சபை முறைகளை அடைவதில் நாம் சென்ற மூன்று ஆண்டுகளில் எவ்வளவு தூரம் முன்னேறி வந்திருக்கிறோம்? கிராம சபைகளைக் கண்காணிக்கத் தகுந்த ஆட்களை கௌரவ குருமாராக அபிஷேகம் செய்யும் ஆலோசனை, இந்தச் சங்கத்திலும், சினட் சங்கத்திலும் அதிமாகத் தர்க்கிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காகச் சிலரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்க ஒழுங்கு செய்திருக்கிறோம். பசுமலை வேதப் பாடசாலை ஆசிரியர்களுடைய சிறந்த உதவியினால் நாம் சுயேட்சை ஊழியர்களுக்குக கொடுக்கும் பயிற்சி விருத்தியடைந்திருக்கிறது. பெண்களுக்குள்ளும், வாலிபர்களுக்குள்ளும் உழைக்கிறவர்களுக்கும் இப்பயிற்சி கொடுக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்த சுயேச்சை ஊழியம் சபையின் வருங்கால வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். கிறிஸ்தவ ஈகையும் பொதுவாக விருத்தி அடைந்து வருகிறது என்றபோதிலும் அது இன்னமும் குறைவாகவே இருக்கிறது. நமது சபையில் ஒரு சிலர் மட்டுமே சபைக்குச் செய்யவேண்டிய கடமை இன்னதென்று உணர்ந்து, தங்கள் திராணிக்குத் தக்கபடி கொடுக்கிறார்கள். பெரும்பான்மையோர் இன்னமும் மற்றவர்களுடைய உதவியைச் சார்ந்து சபையின் சிலாக்கியங்களை அனுபவித்து வருகிறார்கள். வருஷந்தோறும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் செய்யவேண்டிய வேண்டுதலைப்பற்றி நிர்வாகக் கமிற்றி பிரரேபிக்கும் ஆலோசனையை இந்தச் சங்கம் ஒப்புக்கொள்ளும் என நம்புகிறேன். லே அங்கத்தினருடைய கூட்டங்களின் விஷயமாக நாம் அடைந்த முன்னேற்றம் கொஞ்சம்தான். பல உத்தியோகங்களிலும், வியாபாரத்திலும்

வேலைசெய்யும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் சிக்கலான பிரச்னைகளைப்பற்றி ஆலோசனை செய்ய இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. வந்தவர்களில் சிலர் கூட்டங்களின் நோக்கத்தை அறியாமல், வேறு நோக்கத்தோடு வந்ததால், அவைகளால் உண்டான லாபம் மட்டுப்பட்டது ஒழுங்கான சபைக்கூட்டங்களைக் குறித்த விஷயத்தில் நாம் அடைந்த முன்னேற்றம் ஒன்றுமில்லை என்று விசனத்தோடு சொல்லவேண்டியதிருக்கிறது. நான் இதைப்பற்றி மூன்று வருஷங்களுக்கு முன் சொன்னதை இன்றைக்குத் திரும்பச் சொல்லுகிறேன் ஒவ்வொரு இடத்திலுமிருக்கிற சபை, தோதலுக்கல்ல, அல்லது வாக்குக்கொடுத்தலுக்குமல்ல, ஆனால் அவ்விடத்திலுள்ள கிறிஸ்துவின் சரீரமானது செய்யவேண்டிய கடமை, கொடுக்க வேண்டிய சாட்சி, கவனிக்கவேண்டிய பிரச்னை இன்னதென்பதைக் குறித்து ஜெபத்தோடு ஆலோசிக்கும்படி, மாதந்தோறும் அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை கூடிவருவது நமது இந்தியத் திருச்சபைக்கு மிகவும் அவசியம் என்று உறுதியாக நம்புகிறேன்.

சுவிசேஷ பிரபல்லிய விஷயத்தில், ஒட்டன்சத்திர வட்டாரத்தில் நடக்கிற சபை வளர்ச்சியை நாம் மிகுந்த சந்தோஷத்தோடு கவனிக்க வேண்டும் சென்ற வருஷத்தில் கமுதி வட்டாரத்திலும் பல குடும்பங்கள் சபையில் சேர்ந்தது சந்தோஷப்படவேண்டிய காரியம் என்ற போதிலும், இவ்விரண்டு இடங்கள் தவிர, மற்ற சபைகளைக் பார்க்கும்போது, சுவிசேஷ பிரபல்லிய வாஞ்சையையும் சபை விருத்தியடைவதையும் காண முடியாது என்று துக்கத்தோடு சொல்லவேண்டும். இது மிகுந்த கவலை உண்டாக்கக்கூடிய ஒரு காரியம். இப்படி விருத்தி அடையாத சபை பலனில்லாத சபை என்றும், சபையின் முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றாத சபையென்றும் சொல்லவேண்டும்.

சில விஷயங்களில் நாம் இந்த மூன்று ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் கவனிக்கத்தக்கது. ஏறக்குறைய எல்லாக கௌன்சில்களிலும கிராம முன்னேற்ற ஊழியத்துக்கு நல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டன. வியாதிகளைத் தடுக்கும தற்காப்பு முறைகளைக் கற்பிக்கவும். இந்த வேலைக்கு ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும் சில நல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டன. கிறிஸ்தவ நூல்களை இயற்றுவதிலும், விற்பனை செய்வதிலும், விசேஷமாய் பரிசுத்த வேதாகமத்தை விற்பதிலும் நாம் புது முயற்சிகளைச் செய்திருககிறோம். இவையெல்லாம் நாம் சந்தோஷப்படவேண்டிய காரியங்கள் ஆனாலும், இவ்விஷயங்களில் செய்யப்பட்ட முயற்சிகளெல்லாம் வெளி நாடுகளிலிருந்து வந்த பண சகாயத்தினால் செய்யப்பட்டன என்று ஞாபகத்தில் வைக்கவேண்டும். இவைகளைச் செய்ய நாமே பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உணரவேண்டும்.

நமது சபையின் ஜீவியத்தையும், ஊழியத்தையும் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று நிர்வாகக் கமிற்றி, சென்ற ஆகஸ்டு மாதத்தில் தீர்மானம் செய்ததால், ஒவ்வொரு பாஸ்ற்றரேட் கமிற்றியும், ஸ்தாபன நிர்வாகக் கமிற்றியும் தன்வசத்தில் இருந்த ஊழியத்தைக் குறித்து பல கேள்விகளைக் கேட்டு, நன்றாக ஆராய்ந்து, அறிக்கை செய்து அதன்பின் சர்வே கமிற்றி இந்த அறிக்கைகளை நான்கு நாட்களாகப்

படித்து, தர்கித்து, பல ஆலோசனைகளைச் செய்தது. இந்த வேலையில் ஈரோடு சபையைச் சேர்ந்த சங்கை தாடமன் ஐயர் அவர்கள் உதவி செய்தார்கள். இந்த சர்வே கமிற்றியின ஆலோசனைகள் அத்தியக்ஷாதீன கமிற்றிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த சர்வே கமிற்றி செய்த ஆராய்சிகளால் காண்பிக்கப்பட்ட இரண்டு முக்கியமான காரியங்களைப்பற்றி மாத்திரம் இன்றைக்குப் பேச விரும்புகிறேன.

முதலாம் காரியமாவது :—நமது சபையின் முழு ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணப்படுகிற முக்கியமான குறைவு நமது வாலிய ஊழியத்தின் பலவீனமே. இது பல முறைகளிலும் பல சந்தர்ப்பங்களிலும் சர்வே கமிற்றியாருக்கு வற்புறுத்தப்பட்டது. நமது சபைப் பிள்ளைகளில் வெகு சிலர் மட்டும் கிறிஸ்தவ பள்ளிகளில் படிக்கிறார்கள் மற்றவர்களெல்லாரும் கிறிஸ்தவ போதனையில்லாத பள்ளிகளில் படிக்கிறார்கள், அல்லது படிக்காமல் இருக்கிறார்கள. வீட்டிலாவது, ஆலயத்திலாவது கிறிஸ்து மார்க்கத்தின் சத்தியங்களைக் கற்றுக்கொண்டாலே யொழிய வேறு வகையில் கற்க முடியாது. ஒன்றும் அறியாத பேர்க்கிறிஸ்தவர்களாக வளருவார்கள். இதுவரை நமது கிறிஸ்தவ ஸ்தாபனங்களே சபைப் பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவ பயிற்சி கொடுகக எதிர்பார்த்தோம். இனிமேல் பெற்றோரும், சபையும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும. ஏற்றுக்கொள்ளாவிட்டால் சபை நாளுக்கு நாளாக பலவீனமாய்ப் போகும்.

நம்முடைய புள்ளிவிவரக் கணக்கை ஆராய்ந்து பார்த்தால், நமது அத்தியக்ஷாதீனத்திலுள்ள 538 சபைகளில 180 ஓய்வுநாள் பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால் இது நம்முடைய உண்மையான நிலைமையைக் காட்டவில்லை, ஏனென்றால் இந்த 180 சபைகளில் 33 தவிர மற்றவைகளில் நம்முடைய சாதாரண பாடசாலைகள் உண்டு. இப்பாடசாலைகளின் ஆசிரியர்களே ஓய்வுநாள் பள்ளிகளையும் நடத்துகிறார்கள். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், நம்முடைய சபைகள், தங்கள் சிறுவர்களுக்குக் கிறிஸ்தவப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பு தங்களுடையது என்று இன்னும் உணரவில்லை. கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கங்களைப்பார்த்தால் அவைகளும் அதே நிலைமையில் தானிருக்கின்றன. 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞருடைய சங்கங்களின் நிலைமை இன்னும் பரிதாபமாயிருக்கிறது. 79 சபைகளில் மாத்திரம் இளைஞர் சங்கங்களுண்டு. அநேக குருமாரும், சபைகளும், இந்த ஊழியத்தின் முக்கியத்தை இன்னும் அறியவில்லை என்று ஒப்புக்கொளளவேண்டும். நாம் இந்த ஊழியத்தை அலட்சியம் செய்வது சபை தற்கொலை செய்து கொள்ளுவதாகும்.

இளைஞரைக் கிறிஸ்தவப்பயிற்சியில் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய மற்றொரு ஸ்தாபனம் கிறிஸ்தவ இல்லமாகும். இதை எடுத்துக்கூறவும் வேண்டுமோ? ஆம், கூற வேண்டிய அவசியமிருப்பதற்காக வருந்துகிறேன். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் கிறிஸ்தவக் குடும்பந்தான் முதல் அணு. அங்கேதான் முதன் முதல் கிறிஸ்தவபோதனையும் சிட்சையும் கொடுக்கப்படவேண்டும சபையிலுள்ள குடும்பங்களுக்கு உதவிசெய்து பலப்படுத்தவே நம்நாட்டிலும், பிறநாடுகளிலும், "கிறிஸ்தவக் குடும்ப இயக்கம்" ஏற்பட்டிருக்கிறது. நம் சபையிலுள்ள அநேக பாஸ்ற

ரேட்டுகள் கிறிஸ்தவக் குடும்பவிழா கொண்டாடி மிகவும் பயனடைந்திருக்கின்றன இக்கூட்டத்தில் கிறிஸ்தவக் குடும்ப இயக்கத்தைப்பற்றி உபந்நியாசமும், தர்க்கமும் பிற்பாடு நடக்கும். தற்காலத்தில் சபையை ஆவிக்குள்ளாக ஊன்றக் கட்டுவதற்கு இந்த இயக்கம் மிகவும் பிரயோஜனமான கருவியாகும். இதை அலட்சியம் செய்யாதிருப்போமாக

நான் இதுவரைக்கும் பேசினதில் முக்கியமாக சபை ஊழியத்தின் கருவிகளையும், முறைகளையும் பற்றியே பேசினேன். ஆனால் இவைகள் யாவும் குறைவில்லாமலிருந்தாலும், ஆவியின் வல்லமை காணப்படாவிட்டால் நாம் ஒன்றையும் சாதிக்கமுடியாது ஆனால் அதே சமயத்தில், ஆவியின் வல்லமை புதிதாக ஊற்றப்படுதலே நமது முதலாவது தேவை என்பதையும் அதில்லாவிட்டால், நமது பிரச்சனைகளை தீர்க்கமுடியாது என்பதையும் நாம் உணரவேண்டும். மகாகனம் அப்பாசாமி அத்தியக்ஷர் கோயம்புத்தூர் அத்தியக்ஷாதீனத்தில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தால் ஏற்பட்ட மாறுதல்களைக் குறித்து முன் குருமாருக்கு சொன்னதை, சர்வே கமிற்றிக்கூட்டங்களில் சங்கை A.J. தாட்மன் ஐயர் அவர்கள் மூலமாய்த் திரும்பவும் கேட்டோம் பிரிவினைகளால் சிதைந்துபோய், ஆவிக்குரிய ஜீவன் இல்லாமலிருந்த சபைகள் புதுப்பிக்கப்பட்டு, வல்லமையால் நிரப்பப்பட்டதைப்பற்றிக் கேள்விப் பட்டோம். முன்பு வளர்ச்சியற்றிருந்த சபைகள் புதிய சந்தோஷத்துடனும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கிறிஸ்துவின் மந்தையில் மற்றவர்களைக் கொண்டுவரும் வைராக்கியத்துடனும் வளருவதைப் பற்றிக் கேள்விப்பட்டோம். உண்மையாகவே, இவ்வித ஆவிக்குரிய புது ஜீவனும், புதுப்பிக்கப்படுதலுமே நமது முக்கிய தேவை. இதற்காக நாம் ஜெபிக்கவேண்டும். மாமூலென்றல்ல கடமைக்கென்றல்ல; தேவன் நமக்கு ஆவியின் வல்லமையைக் கொடுக்கும் வரை சோர்ந்துபோகாமல், விடாமுயற்சியோடு ஜெபிக்கவேண்டும் கடந்த பதினைந்து மாதங்களாக நம் சபைகளிலுள்ள பலர் இவ்வாறு ஜெபித்துவந்ததற்காக நன்றிசெலுத்துகிறேன். இந்த ஜெபம் வீண்போகாதென்பது நிச்சயம்.

இவ்வாறு ஜெபிக்கும் போது நாம் என்ன செய்கிறோமென்றும் அறியவேண்டும். எல்லாக்காரியங்களிலும் விசேஷமாக இந்தக்காரியத்திலும், நம்முடைய வெற்றியையல்ல, கர்த்தருடைய மகிமையையே முதலாவது தேடவேண்டும் நம்முடைய சொநதத் திட்டங்களுக்குக கடவுளுடைய வல்லமையைத் தேடினால், காரியங்களைத் தலைகீழாக்குகிறவர்களாவோம். தேவனுடைய வல்லமையைப் பெறுவதற்கு முதல் தேவை என்னவென்றால், நாம் முழுவதுமாக நம்மை அவருடைய சித்தத்துக்கு உட்படுத்தவேண்டும். நான் உங்களைக் கேட்கவிரும்புகிறதாவது:— நாம் ஒரு சபையாக, கடவுளுடைய மகிமையையும், கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தையும், வேதாகமத்தின் மூலம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற சுவிசேஷத்தின் சத்தியத்தையும் எல்லாவற்றிற்கும் முதன்மையாக வைக்கிறோமா? நம்முடைய சக்திக்கும் ஞானத்துக்கும் ஏற்றவாறு நம்மைசெய்யப் பிரயாசப்படுகிறோமா என்று நான் கேட்கவில்லை. ஏற்ற சமயத்தில் இந்தக் கேள்வி கேட்கப்பட வேண்டியதுதான். ஆனால், நம்முடைய இரக்ஷகரை, மேலான கற்பனைகள் எவை என்று கேட்டபோது,

அவர், நமது அயலாருக்குச் செய்யவேண்டிய கடமைகளை இரண்டாவதாகவும், கடவுளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முதலாவதாகவும் திட்டமாகக் குறிப்பிட்டார் நான் இங்கு பேசவிரும்புவது கடவுளுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியே கடவுளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நாம் செய்ய முயற்சிக்கும்போது, தப்பபிப்பிராயங்கள், விரோதங்கள் ஏற்படக்கூடும். இன்று இந்தியா தேசத்தில் இதையே காண்கிறோம்.

இரண்டு உதாரணங்களைக் கூறவிரும்புகிறேன். கிறிஸ்தவ ஆசிரியர்கள் ஞாயிற்றுகிழமைகளில், கல்வி இலாகாக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவது அதிகரித்துக் கொண்டுவருகிறது. சாதாரணவேலையை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். இவ்விதம், கர்த்தரால் ஓய்வுக்கென்றும், ஆராதனைக்கென்றும் கொடுக்கப்பட்ட நாள் சாதாரண நாளாக மதிக்கப்படுகிறது. நாம் யூதரல்ல; பரிசேயர் இயேசுவின் காலத்தில், நான்காம் கற்பனையால் கட்டுப்பட்டிருந்ததுபோல நாம் கட்டுப்பட்டவர்களல்ல. ஆனால், நாம் உலகத்துக்கு அஞ்சி கர்த்தருடைய நாளை இப்படி அலட்சியம் செய்தால், சாரமற்ற உப்பாக மாறுவோம். நாம் ஏன் இவ்வாறு உலகத்துக்கு அஞ்சவேண்டும்? கிறிஸ்தவர்களாக நாம் சுதந்தரித்துக் கொண்டவைகளில் விலையேறப் பெற்றதை நாம் ஏன் வீண் பயத்தால் இழந்துபோகவேண்டும்? இப்படிப்பட்ட நிலை ஏற்படும் சமயங்களில், நாம் பணிவோடு, ஆனால் தைரியத்தோடு, "இது கர்த்தருடைய நாள். கர்த்தருடைய கட்டளையின்படி நான் இந்தநாளை செலவிட வேண்டும். உங்களுடைய கூட்டத்துக்கோ, வேலைக்கோ, வரமுடியாது" என்று ஏன் நாம் சொல்லக் கூடாது? நாம் இவ்வாறு செய்யும்போது கர்த்தர் நம்மை கனப்படுத்த மாட்டாரா? ஏராளமான மனிதரும் நம்மைக் கனப்படுத்துவார்களல்லவா?

நான் கூறவிரும்பும் இரண்டாம் உதாரணம் முதலாம் கற்பனையைப் பற்றியது. "உன் தேவனாகிய கர்த்தரைப்பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக". மற்ற கற்பனைகளுக்கெல்லாம் இதுவே ஆதாரம். வேதாகமத்தில் பொய்யான தேவர்களை ஆராதிப்பதே மிகப்பெரிய பாவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையான தேவனை ஆராதிப்பது நன்மையான யாவற்றிற்கும் வேராக இருப்பது போல, தவறான தேவர்களை ஆராதிப்பது எல்லாத் தீமைகளுக்கும் வேராகும். பாவகளிலெல்லாம் இதுவே அதிகமாகத் தண்டிக்கப்படவேண்டியது. இவ்விஷயத்தைப்பற்றி வேதாகமம் மிகவும் கண்டிப்பாகப் பேசுகிறது. பொய்யான தேவர்களின் ஆராதனையோடு எந்தவிதமான சமரஸமும் செய்து கொள்ளமுடியாது. கடவுளென்ற கருதப்பட்ட ரோம ராயனுடைய சிலைக்கு முன்பாகச் சிறிது தூபவர்க்கத்தை வைக்க இணங்காமல், முதல் கிறிஸ்தவர்கள் சித்திரவதையையும் சாவையும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அவ்வாறு செய்திரா விட்டால் இன்று நமக்கு சுவிசேஷம் கிடைத்திருக்காது. இத்தனை விலை கொடுத்துப் பெற்ற சுவிசேஷத்தை இழக்கும் ஆபத்தான நிலைமையில் நாம் இருக்கிறோம். அநேக ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் நடத்தப்படுகிற ஆராதனை முறைமைகளில் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் நாமம், கடவுளல்லாதவைகளின்

நாமங்களோடு கலக்கப்பட்டிருக்கிறது தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம், தேவனுடைய வார்த்தையல்லாத மற்றப் புத்தகங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவை உலகஇரக்ஷகர் என்று அறியாத மக்கள் இந்த ஆராதனைகளை நடத்தும்போது நல்ல மனச்சாக்ஷியோடு நடத்தினாலும் அவர்களை நாம் குற்றப்படுத்துவதற்கில்லை. ஆனால், சத்தியத்தை அறிந்த கிறிஸ்தவர்கள் இந்த ஆராதனையில் கலந்து கொள்ளும்போது அவர்கள் கொடிய பாவஞ்செய்கிறார்களல்லவா? புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களும் பூர்வ சபையின் இரத்தச் சாக்ஷிகளும், சுவிசேஷத்தின் சத்தியத்துக்காகச் சொல்லமுடியாத துன்பம் அனுபவித்த நம்முடைய முற்பிதாக்களும் இதைக் கண்டார்களேயானால் வியப்படைய மாட்டார்களா? வெட்கப்படமாட்டார்களா?

தேவனுடைய கற்பனைகளை, நமது ஆண்டவர் இரண்டு கற்பனைகளாகச் சுருக்கிக் கூறினார் அவைகளில் இரண்டாவது கற்பனை முதலாவதைச் சார்ந்து நிற்கிறது. தேவனுக்குச் செய்யும் கடமையை நாம் முதன்மையாக வைக்காவிட்டால், அயலாருக்கு செய்யும் கடமையைச் சரிவரச் செய்யமுடியாது. தேவனுக்குச் செய்யும் கடமையை முதன்மையாக வைக்காவிட்டால், தேசத்துக்குச் செய்யும் கடமையை நாம் சரிவரச் செய்யமுடியாது கடவுளுக்குச் செய்யும் கடமையென்றால்—அவரையே ஆராதிப்பது, அவர் வாக்கை கனம் பண்ணுவது, இரக்ஷிக்கப்பட அவரையே நம்புவது, எல்லா நன்மைக்கும் அவரையே நோக்கியிருப்பதாகும். இதுவே இக்காலத்தில் நமது மிகமுக்கிய தேவை. நாம் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறியவேண்டும்; தேவனுடைய வசனத்தை அறியவேண்டும்: நமது விசுவாசத்தை அறியவேண்டும். கிறிஸ்துவுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்றும், அவரே கடைசிநாளில் நம்மை நியாயம் தீர்ப்பார் என்றும், அந்த நியாயத்தீர்ப்புக்குத்தான் நாம் பயப்பட வேண்டியவர்கள் என்றும் அறியவேண்டும். கடவுளுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். அதன் மூலம் தான் நம்முடைய காலத்துக்கும், தேசத்துக்கும் உண்மையாகச் சேவை செய்யமுடியும். இதைப் போல கூட்டத்தில் பேசக்கூடிய அநேக காரியங்களுண்டு. ஆனால் உங்கள் செவிகளிலும், இருதயங்களிலும் இந்த ஒரு வார்த்தையை வைக்க விரும்புகிறேன். "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக". தேவனைமுதலிடத்தில் வைத்தால் மாத்திரம் தான், நம்முடைய ஊழியத்துக்குத் தேவையான அவருடைய வல்லமையைக் கேட்கவும், பெற்றுக் கொள்ளவும் கூடும். அவ்வாறு கேட்கும்போது அதைப் பரிபூரணமாய் நமக்குத் தந்தருள்வார்.

திருச்சபைச் செய்திகள்.

1 சபையின் திருநாட்கள்.

மார்ச்சு	6	லெந்து ஞாயிறு		2.
	13	”	”	3
	20	”	”	4.
	25	மங்களவாக்குத் திருநாள்.		
	27	லெந்து ஞாயிறு 5.		

2. ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்கள்.

சென்ற வருடம் அக்டோபர் மாதம் மதுரையில் ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்கள் நடத்தி, அநேகரை மனந்திரும்புதலுக்கு வழி நடத்திய, எழுப்புதல் பிரசங்கியாகிய கனம் N. தானியேல் அவர்களாலும் அவர்களது குடும்பத்தாராலும் அருப்புக்கோட்டை தேவாலயத்தில் 22—1—'55 முதல் 26—1—'55 முடிய ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஏராளமான நண்பர்கள் இக்கூட்டங்களால் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டனர். இன்னும் மிகுந்த பலன்தர ஜெபிப்போம.

3. கனம் எட்மண்ட் எஸ். கார் ஐயரவர்கள்.

இங்கிலாந்தில் 1864ல் பிறந்தார் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்விகற்றுப் பட்டமும் பெற்றூர். 1887—1915 வரை திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தில் மிஷனரி மேற்பார்வையாளராக சிறந்த திருப்பணியாற்றினர். தென்னிந்திய C.M S. சபையார் அவருடைய பக்தியையும், ஈகையையும, தியாக சேவையையும் மறக்கமுடியாது. தமது 90-வது வயதில் இங்கிலாந்தில் கர்த்தருடைய இராஜ்யம் சேர்ந்தார். ஞாபக ஆராதனை சிரிவிலிபுத்தூர் ஆலயத்தில் நடைபெற்றதென்றும் அவர் சபைக்காற்றிய திருப்பணிக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் கனம் யோசுவா ஐயரவர்கள் எழுதுகிறார்கள்.

சிறுவர் பாகம்

(கனம் எல். சாமுவேல் ஆசிரியர், போதனு முறைப் பள்ளி, பசுமலை.)

அழகாபுரி வைத்தியர்

அழகாபுரி என்பது சென்னைக்குச் சுமார் நாற்பது மைல் தூரத்திலுள்ள இயற்கை வளங்கள் பொருந்திய ஒரு சிறு கிராமம். ஊரைச்சுற்றிலும் கண்ணுக்கெட்டும் வரை பச்சைப்பசே லென்னும்

வயல்கள் உண்டு. அவற்றில் நெல்லும் கரும்பும் வாழையும் செழித்து வளரும். தென்னை, கமுகு, பலா, வாதுமை மரங்கள் ஊருக்குள்ளும் அதைச்சுற்றியும் ஏராளம். ஊருக்கு மேற்குப்புறத்தில் படர்ந்த கிளைகளையுடைய பருத்த அரசமரமொன்றுண்டு. அதற்குச்சமீபமாக நாற்புறமும் சுவர்கள் கட்டபட்ட தாமரைத்தடாகம். மரத்தினடியில் களிமண்ணால் ஆக்கப்பட்ட பலவிக்கிரகங்கள்.

அழகாபுரியில் மத்தியான வெயில் சகிக்க முடியாது அவ்வூரிலுள்ள பெரியோரும் சிறியோரும் மத்தியான வேளையில் தடாகத்தில் குளித்து விட்டு மரத்தடியில் வெகுநேரம் தங்கிப்போவது வழக்கம் இந்தத் தடாகத்தினருகில் தான் ஒருநாட் காலை சுமார் பத்து மணிக்குப் பள்ளிச்சிறுவர் எட்டுப்பேர் விளையாடிக் கொண்டிருந்தனர். அன்று பக்கத்தூரில் சந்தையாகையால் பெரியவர்கள் ஒருவரும் அங்குவரவில்லை. மரக்கிளைகளில் பலவிதக் குருவிகள் கீச் கீச் என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தன. பையன்கள் சற்று நேரத்தில் குருவி வேட்டையாட ஆரம்பித்தனர். அவர்கள் எறிந்த கற்களிலொன்று விக்கிரங்களிலொன்முகிய குதிரையின் காதில் விழுந்தது. அதன் காது ஏற்கனவே கீறியிருந்தபடியால் கீழே விழுந்தது. ஆனால் பையன்கள் ஒருவருக்கும் அது தெரியாது.

திடீரென்று பட்டுச்சட்டையும் கண்டை வேஷ்டியு மணிந்த விபூதி பூசின ஒரு பருத்த மனிதன் விக்கிரகங்களின் சமீபத்தில் தோன்றினர். அவருடைய வயது சுமார் முப்பது. நீண்ட முறுக்கின முரட்டு மீசையும் பருத்த பலத்த, சரீரமும் பயங்கர ரூபமுமுள்ளவர். அவர்தான் ரத்தினசாமி யென்பவர். பெரிய தனவந்தன். அவ்வூரில் அவர் இட்டது தான் சட்டம்.

அடா குரங்குக்குட்டிகளா! உங்களுக்கு இங்கு என்னடா வேலை? உங்கள் முதுகுச் சட்டைகளை உரித்துவிடுவேன். எல்லாரும் உடனே என்முன் வந்து ஒழுங்காக நில்லுங்கள். வராவிட்டால் தொலைந்தீர்கள். உம் சீக்கிரம்! விக்கிரகத்தை உடைப்பதற்கு உங்களுக்கு அவ்வளவு கொழுப்பா? என்று கர்ச்சித்தார் ரத்தினசாமி பையன்களின் உல்லாசமும் சல்லாபமும் நொடியில் பரஷ்டமும் தொல்லையுமாக மாறிவிட்டன அவர்கள் கீழ்ப்படிந்தாக வேண்டும். நடுக்கத்தோடும் பயத்தோடும் அவர் முன் வந்து நின்றனர். ரத்தினசாமியின் கண்சிவந்தது மீசை துடித்தது. சத்தம் இன்னும் உயர்ந்தது. உன்பெயரென்ன? உன் அப்பா பெயரென்ன? என்று ஒவ்வொருவரையும் கடுகடுப்போடு கேட்டார். நீ விக்கிரகத்தை உடைத்தாயா என்று அவர் ஒருவரையும் கேட்கவில்லை. கடைசியாக நின்ற பையன் எல்லாரிலும் சிறியவன். அவன் வயது பதின்மூன்று. குவிந்த கன்னங்களும் சிவந்த நிறமும், முத்துப்போன்ற பற்களும்

மின்னும் கண்களும் வாளைத் தண்டெனத் திரண்ட கைகளும், ரத்தின சாமியின் கோபத்தைத் தணித்தன. அவரிடம் திடீரென்று பிள்ளைப் பாசம் ததும்பினது. பையனிடம் அன்பாக வினவினர். ஆனல் அந்தப் பையன் என்ன பதில் சொல்லுவான்?

பையன் பெயர் செல்லப்பதி. அவன் தன் தாயையும் தகப்பனை யும் பார்த்ததில்லை பெயரும் தெரியாது. அவன் இரண்டு வயதுக் குழந்தையாயிருந்த போது அவனுடைய பெற்றோர் கொள்ளை நோயால் மரித்து விட்டனர். அறுபது வயதுக்கிழவியாகிய அவ னுடைய பாட்டிதான் அவனை வளர்த்துவந்தாள். பாட்டி வயல் களில் கூலிவேலை செய்து ஜீவிப்பவள். கூலி கிடையாத நாட்களில் அவள் பட்டினிதான். ஆனல் செல்லப்பதிக்கு எப்படியாவது சாப் பாடு சமபாதித்துக் கொடுத்து விடுவாள். அவன் உள்ளூர்ப் பாட சாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தான். ஆனல் இந்த வருஷம் மேல்படிப்புப் படிக்க வழியில்லை. அவன் கூடப்படித்த பையன்களெல்லாம் மூன்று மைல்தூரத்தில் உள்ள உயர்தரக்கலா சாலையில் சேர்ந்து படித்தார்கள். அங்கே படிக்க வேண்டுமானல் சம்பளம் கட்டவேண்டும். ஆம் செல்லப்பதி பரம ஏழை. பாட்டி இறந்த பின் அவன் நிலைமை யென்ன? இரண்டு மாதங்களுக்குமுன் பக்கதூரிலுள்ள பாதிரி யொருவர் மூலம் அவனும் அவன் பாட்டி யும் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

கிறிஸ்தவமார்க்கத்தில் சேர்ந்த கூலிக்காரக் கிழவியின் பேரன் என்று ரத்தினசாமி யறிந்தவுடனே அவருடைய பிள்ளைப்பாசம் மறைந்தது. பரம்பரையாக நாம் கைக்கொண்டு வந்த கொள்கைகளை யெல்லாம் இகழ்ந்து மதம் மாறிய அந்த அக்கிரமக்காரியின் பேரனு நீ? விக்கிரகத்தை வேறு எவன் உடைத்திருப்பான்? அவ்விதச் செய் கையை நீதான் செய்தவன் அதற்குத்தண்டனையை நீ அடைய வேண்டும் என்று உறுமிக்கொண்டு தன் கையிலிருந்த ஒரு நீண்ட சாவியால் செல்லப்பதியின் நெற்றியில் அடித்தார். இரத்தம் பீறிட் டது. பையன் மூர்ச்சையானன். மூர்ச்சை தெளிந்தபோது செல்லப் பதி தன்னுடைய வீட்டின் ஒரு மூலையில் கிழிந்த பாயில் கிடந்தான். பாட்டி அவனருகில் உட்கார்ந்து ஓலமிட்டுக் கொண்டிருந்தாள் அவள் வேறு என்ன செய்ய முடியும்?

பதினைந்து வருஷங்கள் கடந்தன. இப்போது ரத்தினசாமிக்கு வயது நாற்பத்தைந்து. கொஞ்ச நாளாக அவருக்கு வயிற்றுவலி. அடிக்கடி காய்ச்சலும் வருவதுண்டு. நாட்டுவைத்தியத்தில் தான் அவருக்கு நம்பிக்கை. ஆயினும் வயிற்றுவலி தீர்ந்தபாடில்லை. மேல் நாட்டு முறையில் நடத்தப்படும் வைத்தியசாலை யொன்று மூன்று

மைல் தூரத்திலுள்ள ஊரில் உண்டு. ரத்தினசாமி அங்கு சென்று மருந்து வாங்கினார். வைத்தியர் அவரைச் சோதித்துப்பார்த்து குடலில் ஒரு கட்டியிருப்பதாகவும் ஆகையால் சத்திரச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் சென்னையிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்றும், சத்திரச்சிகிச்சை செய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்து என்றும் சொன்னார். சத்திரச் சிகிச்சை செய்யவேண்டும் என்றுகேட்டவுடனே ரத்தினசாமியின் வீரமெல்லாம் பறந்தது. கோழைத்தனமும் திகிலும் அவரைப்பிடித்தது. எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டுமே. ஆகவே தானும் தன்மனைவியும் சென்னைக்குப்போகவேண்டும் என்று தீர்மானித்தார்.

ரத்தினசாமி சென்னை ஆஸ்பத்திரியை யடைந்தார். கடினமான வியாதிகளையெல்லாம் பெரிய டாக்டர் தான் பார்க்கவேண்டும். சுமார் அரைமணி நேரத்தில் டாக்டர் வந்து விட்டார். அவர் வயது சுமார் இருபத்தெட்டுதான் இருக்கும். தூய வெள்ளையுடையணிந்தவர். ஆஸ்பத்திரியில் உள்ள யாவரும் பயபக்தியோடு அவருக்கு நமஸ்காரம் சொன்னார்கள். ரத்தினசாமியும் அதிக பணிவாக வணங்கினார். டாக்டருடைய நெற்றியில் ஒரு தழும்பு தோன்றினது. ரத்தினசாமி பக்கத்திலுள்ளவர்களைப்பார்த்து இவர் பெயர் என்ன, எந்த ஊர் என்று பலரிடம விசாரித்தார். இவர்தான் பெரிய டாக்டர் இங்கிலாந்தில் படித்தவர். அவருடைய சொந்த ஊர் அழகாபுரி என்று பதில் கிடைத்தது. ரத்தினசாமியின் மனக்கலக்கத்தை வருணிக்க முடியாது, ஐயோ அவர் நெற்றிலுள்ள தழும்பை உண்டாக்கினவன் நான் தான். நான் டாக்டருடைய விரோதி என்னை அவர் அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. தெரிந்தால் என் கதி என்ன என்றெல்லாம் பலவாறு எண்ணியெண்ணிக் கலங்கினார்.

செல்லப்பதி சிறு பையனை ரத்தினசாமியால் காயப்பட்ட பின்பு ஒரு ஆங்கிலேய பாதிரி அவன் மீது கருணைகொண்டு அவனைத் தன் அநாதைப் பள்ளியில் சேர்த்துக்கொண்டார். செல்லப்பதியின் புத்திக் கூர்மையையும் குணத்தையும் பக்தியையும் கவனித்த பாதிரி அவனை இங்கிலாந்துக்கு அனுப்பிப் பெரிய டாக்டராக மாற்றிவிட்டார். இப்போது டாக்டர் செல்லப்பதி வைத்திய நிபுணர். பெரிய ஆஸ்பத்திரிக்குத் தலைவர்.

முதலாவது சந்திக்கும்போதே டாக்டர் செல்லப்பதி ரத்தினசாமியை அடையாளம் கண்டுகொண்டார். தானே அவருக்குச் சிகிச்சை செய்தார். பகலும் இரவும் பலமுறை அவரை வந்து பார்வையிடுவார். அதிக அன்பாகவும், அனுதாபத்தோடும் பேசுவார். தன்னுடைய வீட்டிலிருந்து அவருக்கு நல்ல சத்துணவுகளை அனுப்புவார். சுகமான பின்பும் அவர் ரத்தினசாமியைத் தன்

வீட்டில் ஒருநாள் இருத்தி உபசரித்தார். மறுநாட் காலையில் ரத்தின சாமி தன் ஊர் செல்லவேண்டும்.

ரத்தினசாமிக்கு மனச்சாந்தியில்லை ஐயோ! கொடிய பாவியாகிய என்னை, என்னால் காயப்பட்ட இந்தப் பெரிய டாக்டர் ஏன் இவ்விதம் நேசிக்கிறார். ஒருவேளை நான் யார் என்று அவருக்குத் தெரியாது. நான் அவரிடம் அதைச் சொல்லிவிடுகிறேன். ஏன் நான் உயிரோடிருக்கவேண்டும. அவர் எனக்குத் தண்டனை கொடுக்கட்டும் என்று தீர்மானித்து விட்டார்.

மறுநாட் காலையில் டாக்டர் ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டு விட்டார். மோட்டார்வண்டி பங்களாவுக்கு முன் நின்றது டாக்டர் புறப்பட்டு முன் அறைக்கு வந்தார். உடனே ரத்தினசாமி தரையில் அடியிற்ற மரம்போல் தொப்பென்று விழுந்து டாக்டரின் காலைப் பிடித்தார். ஐயா நான் யார் என்று உங்களுக்குத் தெரிகிறதா. நான்தான் உங்கள் நெற்றியில் காயம் உண்டாக்கிய மாபாவி உங்களுக்குத் துரோகி. உங்களுக்குத் தெரிகிறதா? அப்படியானால் ஏன் என்னை இவ்வளவு நேசிக்கிறீர்கள். உங்கள் கையால் நான் சாகவேண்டும். என்னைக் கொன்றுவிடுங்கள். நான் தங்களிடம் அன்பையடைந்து வாழ்வது நீதியல்ல என்று வீரிட்டுக் கத்தினர்.

டாக்டர் செல்லப்பதி அருளொழுகும் கண்ணோடும் சாந்த குரலோடும் ரத்தினசாமியைத் தழுவி ஐயா நான் உங்களைப் பார்த்தவுடனே அடையாளம் கண்டுவிட்டேன். என் காயம் உங்களாலானது என்பதும் எனக்குத் தெரியும் ஆனால் நாங்கள் ஆராதிக்கும் ஏசுக்கிறிஸ்து பகைவரையும் நேசிக்கவேண்டும் என்று கற்பித்திருக்கிறார். அவர் இந்த உலகில் வாழ்ந்தபோது அவரை யூதர்கள் சவுக்கால் அடித்தார்கள் முகத்தில் துப்பினார்கள் முள்முடியொன்றையவர் தலையில் வைதது்த் தடியால் தலையில் அடித்தார்கள். அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் ஏசுக்கிறிஸ்து தனக்குத் துன்பம் உண்டாக்கின யாவருக்காகவும் ஜெபித்தார். உலகிலுள்ள எல்லாருடைய பாவத்துக்காவும மரித்தார் அவர் பாவத்தை வெறுக்கிறார் ஆனால் பாவியை நேசிக்கிறார் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவனும் அவ்விதமே பாதகவர்களை நேசிக்கவேண்டும் என்று விரும்புகிறார். ஏசு அடைந்த கஷ்டங்களைப்பார்க்கிலும் நான் அதிக துன்பமடைந்து விட்டேனா? நான் உங்களை மன்னித்து விட்டேன். நீங்கள் கலங்கவேண்டாம் உலகம் தரக்கூடாத பொக்கிஷத்தையும் நீங்கள் ஏசுவின் மூலம் பெறலாம் அவர் அருளும் சமாதானத்தையும் அன்பையும் நான் உங்களுக்குத் தருகிறேன் அவற்றை நீங்கள் இந்தப்புத்தகததின் மூலம் அறிந்தடையலாம் என்று சொல்லி ஒரு புதியஏற்பாட்டுப் புத்தகத்தை ரத்தினசாமியிடம் கொடுத்து வழியனுப்பினர்.

ரத்தினசாமி பூரண சுகமடைந்து தன் ஊரில் வசித்தார். அவர் நடத்தை முற்றிலும மாறிவிட்டது கிறிஸ்துவின் அன்பு அவரைப் புது மனிதனுக்கிவிட்டது. தன்னேயும் கிறிஸ்து மன்னிப்பார் என்னும் விசுவாசம் அவருக்கு உண்டாகிவிட்டது தன் வீட்டார் யாவரையும் அயலகத்தாரையும் இருத்திக் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை வாசிப்பார். தனியாக இருக்கும் போது டாக்டர் செல்லப்பதியின் குணம் எவ்விதம் கிறிஸ்துவின் சக்தியால் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று ஆச்சரியப்படுவார். தன்குறைகளேயெல்லாம் எண்ணி விம்மி விம்மி அழுவார்.

அழகாபுரியில் இப்போது ரத்தினசாமியின் குடும்பம் மாத்திரமல்ல, ஊரில் மிகுதியானவர்கள் அங்கே கிறிஸ்தவர்கள். ரத்தினசாமியின் பிரயாசையால் தான் அங்கே ஒரு அழகிய கிறிஸ்தவக் கோவிலும் பள்ளிக்கூடமும் கட்டப்பட்டன் மாதம் ஒரு முறையாவது டாக்டர் செல்லப்பதி அழகாபுரிக்கும் போய் வருவார்.

பிரசங்கக் குறிப்புகள்

(பத்திராதிபர்)

வேதபாடம் :—லூக்கா 12 : 22-31

நோக்கம் :—கவலேப்படாதே—கடவுளே நம்பு.

முகவுரை. உலக வாழ்க்கை கவலே நிறைந்தது. இயேசுவின் காலத்தில் ஜனங்கள் எப்படிக் கவலேப்பட்டார்களோ அப்படியே தற்போதும் நடக்கிறது உலகம் உள்ள அளவும் மனிதர் அப்படியே இருப்பார்கள் போல் தோன்றுகிறது. ஆனுல் அது வேண்டியதில்லே என்கிருர் இயேசு.

பேர் போன மேயோ ஆஸ்பத்திரியின் சிறந்த ஸ்தாபகர் கவலேயைப் பற்றிக் கூறுவதென்ன? "வேலே மனிதனேக் கொல்லும் என்பதை நான் கண்டதில்லே. ஆனுல் கவலே ஏராளமானவர்களேக் கொன்றிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

பிரிவுகள்

1. **கவலேப்பட அவசியமில்லே.** (வா. 22-24).
2. **கவலேப்படுவதால் சாதிப்ப தொன்றுமில்லே.** (வா. 25, 26).
3. **கவலே கடவுள் மேலுள்ள அவநம்பிக்கையின் அறிகுறி.** (வா 28-30).

முடிவுரை. பரிகாரம் என்ன? 31ம் வசனம் பார். கடவுளேத்தேடு. அவர் ராஜ்யத்தின் நீதியை நிலே நாட்டப் பார். மற்றவை ஓசியாய் அருளப்படும். தேவ வாக்குப் பொய்யாகுமா? பரி. பேதுருவின் சாட்சியைக் கவனி. (I பேதுரு 5 : 7).

வேத வினாக்களுக்குரிய விடைகள்.

1. மெத்தூசலா—ஆதி. 5 : 27—969 வருஷம்
2. ஒபதியா, பிலமோன், II யோவான், III யோவான், யூதா
3. உத்தேசமாக பாரசீக வளைகுடாவை ஒட்டிய பாகம்
4. நீதி. 22 : 29
5. II ராஜாக்கள் 13 : 14-19
6. ஏசாயா 52 : 13—53 : 12
7. எலிசா II ராஜா. 2 : 1-6
8. எசேக்கியேல் 1 : 16
9. 20 வது வயதில் சாதாரண ஊழியமும் 30 வயதில் பொறுப்பான ஊழியமும் ஆரம்பித்து 50 வது வயதில் முடித்தனர். எண் 4 : 3, 8 : 24 I நாளா 23 : 24, 27
10. சீனாய்மலைக்கும்—காதேஸ் தேசத்துக்கும் இடையிலுள்ள வனாந்திரம்—உபாகமம் 1 : 19
11. கப்பர்நகூம்
12. ஆகாஸ்வேருவின் தலைநகர்-(எஸ்தர் 1 : 2) பாரசீகத்தின் தென்பாகம்.

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினாறும் பாடம்

"நீடிய பொறுமையுள்ளவராயிருந்தும் சீக்கிரமாய்"

அல்லது

விடாமுயற்சியுள்ள ஜெபத்தின் வல்லமை.

"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்.......... பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள் தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"—(லூக். 18 : 1-8)

ஜெப உலகின் மறைபொருள்களிலெல்லாம் மகா மேன்மையானது விடாமுயற்சியான ஜெபத்தின் தேவையே. அன்பு நிறைந்தவரும், ஆசீர்வதிக்க ஆசையாயிருப்பவருமான கர்த்தரிடத்தில் விண்ணப்பித்த ஜெபத்திற்குப் பதில்தரும்படி, மீண்டும் மீண்டும், மாதா மாதம் சில சமயங்களில் வருடா வருடம் அவரை ஏன் கெஞ்சி மன்றாடிக் கொண்டே 'இருக்கவேண்டும் என்பது நமது அறிவுக் கெட்டாத ஒரு பரம இரகசியம் விசுவாசமுள்ளவராய் ஜெபிப்பதில் நாம் காணும் மகா கஷ்டமான காரியமும அதுவே. விடாமுயற்சியுள்ள வேண்டுதல்களுக்குப்பிறகுங்கூட, நமது ஜெபத்திற்குப்பதில் வராதபோது, நமது பலவீனமான மாம்சம் "இனி ஜெபிப்பதில் பயன் இல்லை, நமது ஜெபத்திற்குக் கடவுள் பதில் கொடாதிருப்பதற்கு யாதேனும் ஒரு இரகசிய காரணம் இருக்கலாம்" என்று கூறுகிறது.

இவ்விதக் கஷ்டத்தை விசுவாசத்தால் மட்டும்தான் நாம் மேற்கொள்ள முடியும். கடவுளுடைய வார்த்தையிலும், இயேசுவின் நாமத்திலும், கடவுள் சித்தத்தையறியப் பரிசுத்தாவியின் நடத்துதலுக்குத் தன்னை முற்றும் ஒப்புக்கொடுப்பதிலும் விசுவாசமானது என்று உறுதியாய் நிலைத்து விட்டதோ அதன்பின் இவ்விதத் தாமதத்தினால் அதைரியப்படவேண்டிய அவசியமே கிடையாது. விசுவாசமுள்ள ஜெபம் தடுக்கப்படமுடியாதது என்று வேதம் கூறுகிறது. மெய்யான விசுவாசம் நம்பிக்கையை விடாது. நீரானது தனது தடுக்கப்பட முடியாத சக்தியைப் பிரயோகிக்க வேண்டுமானால், முழுச்சக்தியோடும பெருக்கெடுத்தாருக ஓடவேண்டுமானால், எப்படி நிறையப் பெருக்கப்படவேண்டுமோ, அப்படியே, கடவுள் நமது ஜெபத்தின் நிறைவைக் காணும்வரை ஜெபத்தையும் பதில் வரும்வரை பெருக்கவேண்டும். உழவன் எடுத்துவைக்கிற பத்தாயிரம் எட்டுகளும உழவன் விதைக்கிற பத்தாயிரம் விதைகளும் அவனது கடைசி அறுவடைக்கு ஒவ்வொரு எட்டும் ஒவ்வொரு விதையும் முன் ஆயத்தமாக எப்படி இருக்கிறதோ அப்படியே விரும்பின ஆசீர்வாதத்தைப் பெறும்வரைக்கும் விடாமுயற்சியான ஒவ்வொரு ஜெபமும் இருக்கிறது. எவனொருவன் சோர்ந்து போகாமல் விடாமுயற்சியுடன் தொடர்ந்து ஜெபிக்கிறானோ அவனுக்கு நிச்சயமாய்ப் பதில் அருளப்படும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மனித சிந்தனையின்படி ஜெபியாமல் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையினால் ஜெபிக்கவேண்டும் ஆபிரகாமும் "தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்". (ரோமர் 4: 18) விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டதைச் சுதந்திரித்துக் கொண்டான்.

நமது விண்ணப்பத்திற்கு உடனடியாகப் பதில் வாராதபோது நாம் செய்யவேண்டியது யாதெனில், இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும். விடாமுயற்சியுடன் ஜெபிக்கவேண்டும் அப்படி ஜெபிக்கும் போதுங்கூட, பொறுமையுடன் நம்பிக்கையுடன் ஜெபிக்க வேண்டும். நமது ஆண்டவர் அநீதியுள்ள நீதிபதியின் உவமையில் இரண்டு அம்சங்களை வற்புறுத்துகிறார். அவ்வம்சங்கள் அநீத நீதிபதியைப்பற்றியதல்ல. நமது தேவனும் பரமபிதாவுமானவரின் இரண்டு தன்மைகளைப்பற்றியே அழுத்தமாய்க் கூறுகிறார். அவ்விரண்டு ஒப்பற்ற தன்மைகள், கடவுளாகிய பரமபிதாவின் குணத்தையும் நடத்தையையும்பற்றி ஆண்டவர் கூறுகிற இருசொற்களின் உட்பொருளை அறிய முயலவேண்டும் அப்படிச் செய்தால், விடாமுயற்சியுள்ள ஜெபத்தில் பொறுமையையும் மகிழ்ச்சி மிக்க நம்பிக்கையையும் இணைக்க ஏதுவாகும். தேவன் அடியார்கள்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயம் செய்வார். இதில் உள்ள நீடிய பொறுமை என்ற சொல் கடவுள் குணத்தையும் சீக்கிரத்தில் என்ற சொல் அவர் நடத்தையையும் காட்டுகின்றன.

அவர்களுக்குச் சீக்கிரத்தில் நியாயம் செய்வார் என்று ஆண்டவர் கூறுகிறார் ஆசீர்வாதம் ஆயத்தமாயிருக்கிறது அவர் அருள் புரிய விருப்பமாயிருப்பது மட்டுமல்ல. கேட்பதைக் கொடுத்தருள அவர் மிகுந்த ஆவலாகவும் இருக்கிறார். அவசியமாயிருக்கிற காலத்திற்குமேல் ஒரு நிமிஷம் கூடக் கடவுள் தாமதியார். சீக்கிரத்தில் பதில் கொடுப்பதற்கு அவரது வல்லமைக்குட்பட்ட சகலத்தையும் செய்வார்.

இது உண்மையாயிருந்தால், அவரது வல்லமை எல்லையற்றதாக இருந்தால் ஜெபத்திற்குப் பதில் தருவதற்கு ஏன் காலதாமதப்படுகிறது? அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அடிக்கடி துன்பத்திலும் எதிர்ப்பிலும் கிடந்து தவித்து, இரவும் பகலுமாக அவரைநோக்கி ஏன் ஓலமிடவேண்டும்? அவர்கள்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்பதே விடை. ஒரு தோட்டக்காரன் தன் நிலத்தின் கனிகளைக் கண்டு கண்குளிரும் நாளுக்காகக் காத்திருக்கின்றான். பயிர்கள் முன் மழையும் பின் மழையும் பெறும் வரை நீடிய பொறுமையுள்ளவனாயிருக்கிறான். தோட்டக்காரன் அறுவடையை ஆவலுடன் எதிர்பார்ப்பது மெய்தான். ஆயினும், பயிரின் முதிர்ச்சிக்குரிய காலத்திற்கும், வெப்பத்திற்கும், மழைக்கும் அவன் பொறுமையுடன் காத்திருக்கின்றான். ஒரு குழந்தை பாதி பழுத்தவுடன் பறிக்க விரும்புகிறது, ஆனால் தோட்டக்காரனோ முழுதும் பழுக்கும்வரை காத்திருக்கிறான்.

படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தின் மீதும் ஆதிக்கம் செய்யும் மெதுவான வளர்ச்சிப் பிரமாணம் மனிதனின் ஆத்மீக வளர்ச்சியின் மீதும் ஆதிக்கம் உடையது விருத்தியின் பாதை மூலமாகத் தான் மனிதன் தெய்வீக எல்லையை அடையமுடியும் கடவுள் காலத்திற்கும் பருவங்களுக்கும் எஜமான் கடவுள் அருளும் ஆசீர்வாதத்தைத் தனியாளும் திருச்சபையும் பெற்றுக்கொள்வதற்கேற்ற காலமும் நேரமும கடவுளுக்கே தெரியும். மேலும் ஒரு தகப்பன் பள்ளியில் படிக்கும் தன் குழந்தையின் பயிற்சி முற்றுப் பெற்று வீடு திரும்புமவரை பொறுமையாய்க் காத்திருப்பதுபோல வே கடவுளும் தம் அடியார் ஜெபப்பள்ளியில், விசுவாசப் பயிற்சியில், முற்றுப்பெறும்வரை நீடிய பொறுமையாயிருந்து சீக்கிரத்தில் நியாயம் செய்கிறார்.

இச்சத்தியத்தின் உட்காட்சி பொறுமையும் விசுவாசமும், காத்திருத்தலும், துரிதமும் அடங்கிய விடாமுயற்சியின் பண்புகளை விசுவாசி பெற உதவுகிறது. கடவுள் வாக்குத்தத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தால்தான் நாம் கேட்பவைகளைப் பெறுவோம. வாக்குத்தத்தத்தில் உள்ள பதிலை, கண்ணுக்குப்புலப்படாத ஆத்மீக உடைமையாக விசுவாசம் பற்றிப்பிடித்து மகிழ்ச்சியுடன் துதிக்கிறது. ஆயினும் வாக்குத்தத்தத்தைப் பற்றிப்பிடித்து அதற்குப் பதிலைப் பெறும் விசுவாசத்திற்கும், அவ்வாக்குத்தத்தத்தை இப்பொழுதே பெற்று அனுபவிக்கும் தெளிவான, முழுமையான, முதிர்ச்சியுற்றதுமான விசுவாசத்திற்கும் வேறுபாடு உண்டு. விடாமுயற்சியுள்ள, நம்பிக்கையுள்ள, நன்றியுள்ள ஜெபத்தியான ஆத்துமா கடவுளோடுள்ள முழு ஐக்கியத்தில் வளர்கிறது. அதன் மூலமே அவரது ஆசியைத் தனதாக்கிக்கொள்ளும் நமது சூழ்நிலையிலும், திருச்சபையிலும், கடவுள் ஆட்சியிலும உள்ள நமது குறைபாடுகளைச் சரிப்படுத்துவது ஜெபமேயாகும். இப்படி நாம் நம்மைச் சீர்ப்படுத்தியபின்னரே ஜெபத்திற்கு முழுபதிலும் கிடைக்கும். ஆண்டவர் கற்பித்தபடி, பெற்றுக் கொண்டதாக நம்பும் விசுவாசமே கடவுள் விரும்பும் காலத்தில் பதில் அருள இடம் கொடுக்கும். விசுவாசமே வெற்றி. அமைதியோடும, உறுதியான விடாமுயற்சியோடும், தான் வேண்டிக்கொண்டதை அடையும்வரை, தொடர்ந்து ஜெபிக்கவும், நன்றி கூறவும் விசுவாசம் முயலும். 'நீடிய பொறுமையாயிருந்து' என்பதும் 'சீக்கிரத்தில்' என்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாய் நமக்கு முதலில் தோன்றினது. காணப்படாத கடவுளின் பதிலை, இன்றே, இப்பொழுதே, இங்கேயே பெற்றுக் கொண்டதாகக் கருதி மகிழ்கிற விசுவாசம், பொறுமையோடு அப்பதில் வெளிப்படுத்தப்படும் வரைக்கும் இரவும் பகலும் வேண்டுதல் செய்கிறது. கடவுளுக்குக் காத்திருக்கும் அடியானின் வெற்றி

யுள்ள ஆனால் பொறுமையுள்ள விசுவாசமே கடவுளின் நீடிய பொறுமை சீக்கிரத்தில் முடிவதைக் காண்கிறது.

இவ்விதமாகத் தாமதித்துவரும் பதிலில் நமக்கேற்படும் சோதனை யாதெனில், நாம் கேட்டுக்கொண்டது கடவுளுக்குச் சித்தமில்லை என்று தவறாக எண்ணுவதாகும். நமது ஜெபம் கடவுளின் திருவாக்குப்படியும், ஆவியால் நடத்தப்பட்டதுமாயிருக்கும் பட்சத்தில் நாம் அவ்விதம் பயப்பட அவசியமே கிடையாது. ஆதலால் கடவுளுக்குக் காலம் கொடுப்போமாக. அவரோடு தினசரி ஐக்கியப்படுவதற்கும், அவரது திருப்பிரசன்னத்தின் முழுச் செல்வாக்கும் நமமீது ஆதிக்கம் செய்வதற்கும், நாளுக்குநாள் நாம் கடவுள் அருளுக்காகக் காத்திருப்பதற்கும், நமது விசுவாசம் நம்மில் முற்றும் நிறைவதன் மூலமாகத் தன்னை மெய்ப்பிக்கிறதற்கும் நாம் காலம் தரவேண்டும். அப்படிச் செய்வோமானால் அவர் விசுவாசத்திலிருந்து நேர்முக தரிசனத்திற்கு நம்மை நடத்துவார் அப்போது கடவுளின் மகிமையைக் காண்போம். தாமதம் காரணமாக நமது விசுவாசம் தளராதிருப்பதாக விசுவாச வளர்ச்சிக்குத் தாமதம் நல்லதுதான். எப்படியெனில், முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் நிலம் பலனைக் கொடுப்பது போலவே விசுவாசமும் படிப்படியாய்த்தான் பலனையடையும் (மாற்கு 4 : 28) ஒவ்வொரு விசுவாசமுள்ள ஜெபமும் இறுதி வெற்றிக்கு ஒவ்வொரு படியாயமைகிறது ஒவ்வொரு விசுவாசமுள்ள ஜெபமும் கனியை முதிரச் செய்து நம்மை அதனண்டை நெருங்கச் செய்கிறது கடவுள் ஒருவரே அறியக்கூடிய ஜெபத்தின் அளவையும் விசுவாசத்தின் அளவையும் அதிகரிக்கிறது காணப்படா உலகின் இடையூறுகளை வெல்கிறது பதிலருள்வதைத் துரிதப்படுத்துகிறது கடவுளின் பிள்ளையே! காலம் கொடு கடவுளுக்கு, அவர் உன்மீது நீடிய பொறுமையாயிருக்கிறார் அவர் தாம அருளவிருக்கும் ஆசி செழுமையும், முழுமையும், நிச்சயமுமானதாயிருக்க விரும்புகிறார் இரவும் பகலுமாக நீ ஜெபிக்கும்போது அவருக்குக் காலம் கொடு 'சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்பதைமட்டும் நினைவுகூர்

அப்படிப்பட்ட விடாமுயற்சியுள்ள ஜெபம் நாவாலுரைக்க முடியாதது. இருதயத்தை ஆராய்வது விசுவாசமுள்ள ஜெபமே. கடவுள் ஆசி உனக்கு வருவதற்குத் தடையாயிருக்கும், கடவுள் சித்தத்திற் கொவ்வாத உனது குறைவுகளை, பாவங்களை யறந்து அறவே யொழிக்கவும், அறிக்கையிடவும் அது உனக்குக் கற்பிக்கிறது அவரோடு நெருங்கி ஐக்கியப்படுவதற்கு உன்னை நடத்துகிறது. ஜெபிக்கக் கற்பிக்கிறவரும் அவரே. மாய்மாலமாக அல்ல.

மெய்யாகவே அவருடைய திரு இரத்தத்தாலும் ஆவியாலும் சுத்திகரிக்கப்பட்டு அவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்க உதவுகிறது. கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்கச் செய்கிறது 'நீடிய பொறுமை — சீக்கிரத்திலே' என்ற இந்த இரு சொற்களும் ஜெபத்தின் வாசலில் காணப்படுகிற கடவுளின் குறிப்புச் சொற்கள். இவை உன்னுடைய குறிப்புச் சொற்களாகவும் இருக்கட்டும்.

உடலின் வேலையென்றாலும்சரி, உள்ளத்தின் வேலையென்றாலும்சரி எல்லாவற்றிற்கும் காலமும் முயற்சியும் தேவை அவ்வேலைக்கு நம்மை நாமே முற்றும் ஒப்புக் கொடுத்தல் வேண்டும் முயற்சியுள்ளவருக்கும் புத்திநுட்ப முடையவருக்கும் தான் இயற்கையன்னை தன்னை வெளிப்படுத்துகிறாள் தன் பெருநிதிகளைக் கொடுக்கிறாள். ஆத்மீக வாழ்விலும் அப்படியே நடைபெறுகிறது. பரத்திலே நாம விதைக்கும் வித்தும் நாம் எடுக்கும் முயற்சிக்கும், பரத்தில் நமது விசுவாசத்தின் செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கும் நமதுள்ளம், உடலம், ஆன்மா ஆகிய எல்லாம் தேவை ஜெபத்திற்கு நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும் நாம் சோர்ந்து போகாதிருப்போமானால் ஏற்றகாலத்தில் நாம் கேட்பவைகளை நிச்சயமாய்ப் பெறுவோம் என்ற நம்பிக்கை குறையாதிருப்போமாக. நமது விண்ணப்பத்திற்குப் பதில்தரக் காலம் கொடுப்போமாக. கிறிஸ்துவின் திருச்சபைக்காக ஜெபிக்கும்போது இப்பாடத்தை நாம் மறவாதிருப்போமாக திருச்சபைக்காக நாம் ஜெபிக்கும்போது சோர்ந்துபோகாது தொடர்ந்து ஜெபித்தால் கடவுள் ஏற்ற காலத்தில் நிச்சயமாகப் பதிலருள்வார்.

இரக்ஷணியமனோகரம்—குமாராநுபூதி (தொடர்ச்சி)

40 மறுத்தாய் என முன் ஒரு மாதவனை
வெறுத்தாய் அலை, என் உறு வெம்பிழையும்
பொறுத்தாய் எனில் உன் புகழ், மற்று அதைவிட்டு
ஒறுத்தாய் எனில் உன் உளம் உத்தமனே

உத்தமனே! முன்=முன்னே; மறுத்தாய் என=மும் முறை என்னை மறுதலித்தாய் என்று; ஒரு மாதவனை—சிறந்த சீஷனாகிய சீமோனை; வெறுத்தாய் அலை=வெறுக்கவில்லை; என் உறு வெம்பிழையும்=என்னில் காணும் கொடிய பாவங்களையும்; பொறுத்தாய் எனில்=மன்னித்தால்; உன் புகழ்=உனக்குப் புகழ் ஆகும்; மற்றும் அதை விட்டு=அவ்வாறன்றி மன்னிக்காமல் விட்டு; ஒறுத்தாய் எனில்=என்னைத் தண்டித்தாயானால்; உன் உளம்=அதுவும் உன் சித்தம்

41 ஐயோ உலகத்து எனது ஆயுளின் நாள்
பொய்யோ கனவோ எனப் போயின ஏசு +
ஐயா மரணத்து அபயாஸ்தம் அளித்து
உய்யான வனத்து எனை உய்த்தருளே.

ஏசு ஐயா! உலகத்து=உலகத்தில்; எனது ஆயுளின் நாள்=என் ஆயுளின் நாட்கள்; பொய்யோ கனவோ எனப் போயின=பொய் போலும் கனவுபோலும் கழிந்துபோயின; மரணத்து=மரணத்தில்; அபயாஸ்தம் அளித்து=பயப்படாதே எனக்கையமர்த்தி; உய்யான வனத்து=ஆன்மீக ஏதேனாகிய பரதீஸில் (ஸ்வர்க்கத்தில்); எனை உய்த்தருளே=என்னைச் சேர்த்தருள்வாயாக [அபயாஸ்தம்=அபய+அஸ்தம். அபயம்=பயமின்மை; அஸ்தம்=கை. இறைவனின் கரங்களுள் ஒன்று அபயாஸ்தம் அஞ்சேல் என்பது; மற்றொன்று வரதாஸ்தம்=வரத+அஸ்தம்=என்னிடம்வா நீ வேண்டுவன தருவேன் என்பது.]

42 இருமைக்கு இடையாய இருள் கடலுக்கு
ஒரு மெய்ப்புணை உன் இரு சேவடியே
அருமைத்துணை எற்கு அமையத்து உதவு, என்
தருமத்துரையாய சதோதயனே.

தருமத்துரையாய=தருமப் பிரபுவாகிய; சதோயதனே=அடியார் உள்ளத்தில் என்றும் எழுந்தருளி இருப்பவனே, அல்லது அடியாருக்கு நித்ய ஐஸ்வர்யமானவனே; இருமைக்கு=இம்மை மறுமை ஆகிய இரண்டிற்கும்; இடையாய=இடையிலுள்ள; இருள் கடலுக்கு=மரணமாகிய இருட்கடலைக்கடக்க; உன் இரு சேவடி=உன் இரு செவ்விய பாதங்களும்; ஒரு மெய்ப்புணை=உண்மையான ஒரு படகு ஆகும்; அமையத்து=கடக்கவேண்டிய அச்சமயத்தில்; அருமைத்துணை=அரிய உன் திருவடித்துணையை; எற்கு=எனக்கு; உதவு=ஈந்தருள் [உதயம்=எழுதல் அல்லது ஐஸ்வர்யம்]

43 மரணம் வருமே வருமே என உள் +
கரணம் பதையாக் கவலும் கடையேற்கு
அரணம் பிறிது இன்று அரவிந்தமலர்ச்
சரணம் சரணம் தயை ஆதிபனே,

தயை ஆதிபனே=கருணைமூர்த்தியே; மரணம் வருமே வருமே என=மரணம் வருதல் நிச்சயம் என்று; உட்கரணம் பதையா=உள் இந்திரியங்கள் கலங்கி; கவலும்=கவலைப்படுகின்ற; கடையேற்கு=இழிஞனாகிய எனக்கு: அரணம் பிறிது இன்று=தஞ்சம் வேறு இல்லை; அரவிந்த மலர்=தாமரை மலர் போன்ற; சரணம்=உன் திருப்பாதங்களே, சரணம்=என் அடைக்கலம்.

44 ஜெகத்துக்கு ஒரு ரக்ஷகனும் சிலுவை
முகத்து ஈட்டிய ரக்ஷணை முன்புற என்
அகத்தே விஸ்வாசம் அலங்குவது என்
இகத்து உன் உயிர் எற்கு அருள் எம்பரனே.

எம் பரனே! ஜெகத்துக்கு=உலகமுழுவதற்கும்; ஒரு ரக்ஷகனும்=ஒப்பற்ற ரக்ஷகனாக; சிலுவை முகத்து=சிலுவையின் மேல், ஈட்டிய நீ செய்து முடித்த; இரக்ஷணை=இரக்ஷிப்பு; என் முன்பு உற=என் கண் முன் சதா இருந்தும்; என் அகத்தே=என் மனத்தில்; விசுவாசம்=என் விஸ்வாசம்; அலங்குவது என்=கலங்குவது என்ன காரணம்பற்றி; (ஏனெனில் கிறிஸ்தவ ஜீவியம் என்னில் இல்லாததால் தான். ஆகையால்); இகத்து=இவ்வாழ்க்கையிலேயே; உன் உயிர்=உன் போல் ஜீவிக்கும் ஜீவியத்தை; எற்கு அருள்=எனக்கு அருள்வாயாக.

45 அன்போடு செயும் கிரியைத்தொடர் ஆர்ந்து
உன்பால் விசுவாசம் உரம் பெறவும்
முன் பாவம் அனைத்தும் முருக்கி ஒழித்து
என்பால் அருள் யேசு தயாபரனே.

யேசு தயாபரனே! அன்போடு செயும் கிரியைத் தொடர் ஆர்த்து=அன்பின் கிரியைகள் இடையறாமல் நிறைந்து; உன்பால்=உன் மேல்; விசுவாசம் உரம் பெறவும்=என் விஸ்வாசம் பலப்பட; முன்=முன் நான் செய்த; பாவம் அனைத்தும் முருக்கி ஒழித்து=பாவங்களையெல்லாம் களைந்து எறிந்து; என்பால் அருள்=என்னிடத்தில் கிருபை புரிவாயாக.

46 அந்தத்தை அடுத்தனன், அஞ்சல் என
முந்துற்று உன் முகத்தொளி வீசி என
சிந்தைத்திடன் நல்கி மெய்ச் சீவநிலை
தந்து உற்ற நலம் புரி சத்தியனே.

சத்தியனே! அந்தத்தை அடுத்தனன்=என் ஆயுளின் முடிவைக் கிட்டியிருக்கிறேன்; அஞ்சல் என=அஞ்சாதே என்று; முந்துற்று=என் முன் வந்து; உன் முகத்தொளி வீசி=உன் திருமுகப்பிரகாசத்தை என்மேல் வீசி; என=என்னுடைய; சிந்தைத் திடன் நல்கி=மனதுக்கு தைரியத்தை உண்டாக்கி; மெய்ச் சீவநிலை=அழியாத மெய் வாழ்வை; தந்து=கொடுத்து; உற்ற=மெய் அடியாருக்கு உரிய; நலம் புரி=பாக்கியத்தை ஈந்தருள்வாயாக.

வேத விளுக்கள்—பெப்ரவரி

(கனம் செல்வம் டெயிலர் அம்மாள், வேதப்பாடசாலை, பசுமலை)

1. *நீண்ட காலம் வசித்த மனிதன் யார்? அவன் எவ்வளவு காலம் ஜீவித்தான்?*
2. *வேதாகமத்தில் ஒரு அதிகாரம் மாத்திரம் உடைய ஐந்து புஸ்தகங்கள் எவை?*
3. *ஏதேன் தோட்டம் எங்கே இருந்தது?*
4. *தன் வேலையில் ஜாக்கிரதையுள்ள மனுஷனைப்பற்றிய நீதி மொழி என்ன?*
5. *எந்த அரசன் அம்புகளை எய்த உவமானத்தில் தன் சக்திக் குறைவை வெளிப்படுத்தினன்?*
6. *பாடுபடும் தாசன் என்று கிறிஸ்துவைக் குறித்த முக்கிய தீர்க்க தரிசனம எங்கே வருகிறது?*
7. *எலியாவின் கடைசி பயணத்தில் கூட பின் செல்ல விரும்பியது யார்?*
8. *சக்கரத்துக்குள் சக்கரம் என்ற தரிசனம் வேதத்தில் எங்கே வருகிறது?*
9. *ஆலயச்சேவையை லேவியர் எந்த வயதில் ஆரம்பித்து எந்த வயதில் முடித்தனர்?*
10. *வஞ்ந்திரங்களில் பெரிதும், பயங்கரமானதும் எது?*
11. *எந்த புதிய ஏற்பாட்டின் பட்டினம் நாகூம் தீர்க்கதரிசியின் பெயரை ஒட்டியுள்ளது?*
12. *சூசான் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது?*

(குறிப்பு:—விடைகளுக்கு மற்றொரு பக்கம் பார்க்கவும். ப-ர்)

கி. மு. சங்கப் பொருட்கள்—பெப்ரவரி, 1955.

பெப்ரவரி

1 தீர ஆலோசிக்காத வாக்கு மாற். 3 : 17-29
2 வீணான வாக்குத்தத்தம் மாற் 14 : 26-31 மாற். 14 : 66-72
3 நிபந்தனையோடு கூடிய வாக்குத்தத்தம் ஆதி. 28 : 10-12
4 நிபந்தனையற்ற வாக்குத்தத்தம்—தானி. 3 : 8-18
5 உண்மையான வாக்குத்தத்தம்—பிரசங். 5 : 1-5
6 பக்தி முயற்சி சங்கநாள். நமது உடன்படிக்கை (3) வாக்குத்தத்தம்
2 சாமு 15 : 15 லூக் 14 : 25-35

தற்பிரதிஷ்டை

7 நித்திய காலம்—சங். 90 : 1-17
8 காலத்தை பிரயோஜனப்படுத்தல்—லூக் 16 : 1-8
9 ,, ,, —லூக் 16 · 9-16
10 கடவுளும், காலமும்—லூக் 12 · 16-21
11 காலத்தை ஒட்டி நமது ஜீவியம்—ரோம 12 : 1-21
12 சாவுக்கினமற்ற காலம்—1 கொரி. 15 : 50-58
13 தற்பிரதிஷ்டை "என்தன் ஜீவன் இயேசுவே" (1) என்னுடைய காலம்—பிர 3 : 1-22

நம்முடைய உடன்படிக்கை (4) ஜெபம்

14 தாபந்தமான ஜெபம்—நெகே 1 : 1-11
15 இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்—லூக் 11 · 1-13
16 இரகசியமாய் ஜெபம் செய்யுங்கள்—மத் 6 · 1-15
17 நம்பிக்கையோடு ஜெபியுங்கள்—மாற் 11 : 22-25
18 கேட்கப்பட்ட ஜெபம்—அப் 12 : 5-16
19 நம்முடைய கர்த்தருடைய ஜெபம்—யோவா 17 · 1-26
20 நம்முடைய உடன்படிக்கை (4) ஜெபம்—லூக் 18 : 1-14

நமது உடன்படிக்கை (5) சத்திய வேதாகமம்

21 "கர்த்தருடைய வேதம் குறைவற்றது" சங் 19 : 1-14
22 "உமது வேதத்தின்பேரில் நான் எவ்வளவு பிரியமாய் இருக்கிறேன்" —சங் 119 : 97-112
23 நியாயப்பிரமாணத்தைத் திரும்பக் கண்டெடுத்தல் —2 ராஜா 22 : 1-13
24 தீர்க்கதரிசனத்தை எழுதுதல்—எரேமி. 36 : 1-10
25 சுவிசேஷங்களை எழுதுதல்—லூக். 1 : 1-5
26 வேதத்தின் பிரயோஜனம்—2 தீமோ. 3 : 1-17
27 நமது உடன்படிக்கை (5) சத்தியவேதம்—அப் 17 : 10-14
28 வாக்குத்தத்தம்—ஆதி. 12 : 1-5

விளம்பரம்

இராமனாதபுரம் பரிசுத்த மார்ட்டின் ஆஸ்பத்திரியில் மருத்துவப் பயிற்சி பெறுவதற்காக அப்ளிகேஷன்கள் ஒவ்வொரு வருஷமும் மார்ச் எப்ரல் மாதங்களில்தான் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் தமிழில் சொந்தக் கையெழுத்தாக வயது பாஸ்பண்ணின வகுப்பு முதலிய விவரங்கள் எழுதப்பட்டு நாலணா ஸ்டாம்புகளுடன் மெடிக்கல் ஸூப்பரின்டென்டென்டுக்கு அனுப்பப்படவேண்டும்.

Lenox Press, Pasumalai 1955—474 C.